**தேர்தல் / அவசரம்**

எண். 5/11/1/1/பதிவாளர்/திட்டம்/எம்/2016/199
புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை
***

8 APR 2016

## சுற்றறிக்கை

பொருள்: புதுச்சேரி சட்டமன்ற தேர்தல் 2016 —— நன்னடத்தை விதிகளைப் பின்பற்ற அறிவுறுத்தல் தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலக சுற்றறிக்கை எண் 5/11/1/1/பதிவாளர்/திட்டம்/எம்/2016/ நாள் 4.3.2016.

***

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் 13-வது சட்டமன்ற தேர்தல் 16.5.2016 அன்று நடைபெறவுள்ளது. இந்திய தேர்தல் ஆணையம் சட்டமன்ற தேர்தல் தொடர்பாக அறிவித்த 4.3.2016 முதல் மாதிரி நன்னடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்துள்ளன. இவ்விதிகள் 21.5.2016 வரை அமுலிலிருக்கும். மாதிரி நன்னடத்தை விதிகளைக் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்த பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு இல்லாத சில சங்கங்களில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழு பதிவாளரால் நியமனம் செய்யப்பட்டு அக்குழுவின் நிர்வாகத்தில் இச்சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் சங்கத்தின் அன்றாட பணிகளை மட்டுமே இன்நன்னடத்தை விதிகள் அமுலிலிருக்கும் காலத்தில் செய்துவர வேண்டும். இக்குழு உறுப்பினர்கள் எவ்வித அரசியல் கட்சிக்கோ அல்லது யாதொருவரின் தேர்தல் தொடர்பாகவோ எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது.

3. சங்க பணியாளர்கள் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

4. எவ்வித பணி நியமனம், பணி நிரந்தரம், பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை நன்னடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள காலத்திற்குத் தடை செய்யப்படுகின்றன.

5. இம்மூவர் குழுவின் செயல்பாடுகள் குறித்து எவ்வித புகாரும் வரா வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு இக்குழுவிற்கு உள்ளது.

மேற்கூறிய அறிவுறுத்தல்கள் 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவுச் சட்டத்தின் பிரிவு 33 (2)-ன் கீழ் மூவர் குழு கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளாக அறிவுறுத்தப்படுகின்றன. இன்நெறிமுறைகளை மீறும் குழுவின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியவும்.

8/4/16

**(Dr. A.S. சிவகுமார்)**
**கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்**

பெறுநர்:

தலைவர்,
மூவர் குழு உள்ள சங்கங்கள்,
புதுச்சேரி / காரைக்கால்.

நகல்:

1. தலைமை தேர்தல் அதிகாரி, புதுச்சேரி. } மேலான தகவலுக்கு
2. மாவட்ட தேர்தல் அதிகாரி, புதுச்சேரி. }
3. பால்வள அபிவிருத்தி அதிகாரி / துணைப்பதிவாளர் (கைத்தறி / நுகர்வோர் / கடன் / வீட்டுவசதி), கூட்டுறவுத்துறை, புதுச்சேரி.